ஞானபாநு.

VOL 3 } தொகுதி 3. | November 1915. ராக்ஷஸஹு கார்த்திகைமீ | { No 8. பகுதி 8.

ப்ரணவ கோஷம்.

பேரிடி முழங்குகின்றது, சமுத்திரம் கோஷிக்கின்றது; சிம்ஹம் கர்ச்சிக்கின்றது; யானை வீறிடுகின்றது, குதிரை கனைக்கின்றது, கழுதை கத்துகின்றது; இவற்றையெல்லாம் நாம் கூர்ந்து கவனிப்போமாயின் இச்சத்தங்கட்கெல்லாம் மூலவித்தாயிருந்தும் இவற்றையெல்லாம் அடக்கிமேலோங்கி நிற்கும்சப்தம்ஒன்று தென்படும். இம்முரட்டுச் சத்தங்களில் மாத்திரமன்று, வீணை, மிருதங்கம், நாகசுரம் முதலிய கீதவாத்தியங்களிலிருந்தும் கேட்கப் படும் நாதமானது அவ்வொரு சப்தத்தையே விளக்குவதாகவிருக்கிறது. அவ்வொருசப்தம் "ஓம்" என்ற பிரணவசப்தமேயாம். இந்த "ஓம்" என்ற சப்தமே சப்தசமஷ்டி யென்றும் சொல்லப்படும்- பலவிதமான சாமான்கள் விற்கப்படும் ஒருசந்தையிலிருந்து கிளம்பும் சந்தைக் கூச்சலை நாம் தூரத்திலிருந்து கவனிப்போமாயின், இன்னதென்று நாம் கண்டுபிடிக்கமுடியாத, அர்த்தமேயில்லாத ஒரு பெரும்சப்தத்தை நாம் கேட்கின்றோமேயொழிய, விவரமாக ஒன்றும் தெரிகின்றதில்லை. சந்தையிலிருந்து கிளம்புகின்ற அந்தசப்தம், இன்னதென்று கண்டுபிடிக்கமுடியாத அந்தசப்தம் "ஓம்," "ஓம்" என்று குமுறிக்கொண்டு தூரத்திலுள்ள ஒவ்வொருவருடைய செவிகளிலும் நுழைகின்றது என்பதைக் கவனித்தோர் அறிவார். வாழைக்காய், கத்தரிக்காய், புடலங்காய் முதலிய பலவிதசாமான்களின் பெயர்களும் இவற்றை விலை கூறும் வியாபாரிகளின் இரைச்சலும் வாங்குவோர்களுடைய கூச்சலும் இவையெல்லாம் அடங்கி உருண்டுதிரண்டு "ஓம்" என்ற ஓரேசப்தமாக உலகில் செல்கின்றன.

* * *

"ஓம்" என்பது ஓரே அட்சரம் என்று வேதசாஸ்திரங்கள் பறைபடிக்கின்றன; ஆன்றோர்களும் கூறுகின்றார்கள். சூட்சும ரூபமாக வெளிப்படும் சப்தத்தை ஸ்தூலரூபமாக விளக்குவதற்கு

எழுத்து ஏற்பட்டது; அழியாதசப்தத்தை விளக்குவதால், இவ்வெழுத்துக்கு அக்ஷரம் எனப்பெயர்வாய்த்தது. சமஷ்டி சப்தமாயும் பிரபஞ்ச சப்தங்கட்கெல்லாம் மூலகாரணமாயும் இருக்கின்ற ஓங்காரமே அட்சரம் எனப்படும். இந்த ஓங்கார சப்தத்தினின்று கிளம்பும் மற்றைய சப்தங்களையும் விளக்குவதற்கேற்பட்ட எழுத்துக்களும் அக்ஷரங்கள் எனவே அழைக்கப்பட்டன. ஓரே அக்ஷரம் என்று சொல்லப்படுகின்ற "ஓம்" என்னும் சப்தமானது அ, உ, ம், என்ற மூன்று சப்தங்கள் சேர்ந்தது. நமது அடித்தொண்டையிலிருந்து அ என்றசப்தம் உண்டாகின்றது. அடித்தொண்டையிலிருந்து வாய் மூடிகளாகிற உதடுகளின் வரையில் உ என்ற சப்தம் உருளுகிறது. உதடுகள் இரண்டும் ம் என்ற சப்தத்தில் ஒன்றுடனொன்றுசேர்ந்துகொண்டு வாயை மூடிவிடுகின்றன. வாய்திறந்து வாய்மூடும்வரையில் அ என்றசப்தம் முதலிலும் உ என்ற சப்தம் இடையிலும் ம் என்ற சப்தம் கடையிலுமாக இம்மூன்று சப்தங்களும் சப்தப்பிரபஞ்சத்தை நன்றாக விளக்கிவிடுகின்றன. சப்தப்பிரபஞ்சத்தின் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் முதலியன இம்மூன்று சப்தங்களாலேயே உண்டாகின்றன. இம்மூன்று சப்தங்களுமே ஒன்று சேர்ந்து "ஓம்" என்ற பிரணவ சப்தமாயிருக்கின்றன.

* * *

ஏகமாயிரண்டற்று இருக்கும் பிரஹ்மஸ்வரூபத்தை "ஓம்" என்ற ஒரு சப்தமே உணர்த்தவல்லது. இந்த ஓங்காரத்தின் மகிமை அளவிடற்கரியது. ஈரேழு பதினான்குலகங்களும் இந்த ஓங்காரத்திற்குள் அடங்கி நிற்கின்றன. திரிமூர்த்திகளுடைய திவ்விய உலகங்கள் மூன்றும் இதற்குள் தான் அடங்கியிருக்கின்றன. ஜாக்கிர, ஸ்வப்பன, சுஷுப்திப் பிரபஞ்சங்களெல்லாம் அகார, உகார, மகார சப்தஸ்வரூபங்களே. "ஓம், இது ஒன்று, அழியாதது, பிரஹ்மஸ்வரூபம்" என்று உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. ஹிந்துமதத்தின் பற்பலபிரிவினர்களாகிய சைவர், வைஷ்ணவர், மாத்வர், முதலியோர் தங்களுடைய கொள்கைகளிலும் உபாசனைகளிலும் கிரியைகளும் ஒருவரிலிருந்து ஒருவர் வித்தியாசப்படலாம்; ஆனால் இந்தப் பிரணவசப்த விஷயத்தில் எல்லாரும் ஒன்றே. ஓங்காரம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஓங்காரத்தின் உண்மையையும் உயர்வையும் ஒப்புக்கொள்ளாதவன்

ஹிந்துவாகமாட்டான்; ஹிந்துமதத்தில் அவனுக்கு இடம் கிடையாது.

* * *

“ஓம்” என்றசப்தத்திலிருந்தே பாஷை பிறந்தது. ஒரு குழந்தைபிறந்தவுடனதைக் கவனித்தால், அது அ என்றசப்தத்தையே முதலில் உச்சரிக்கிறதென்பது ஆராய்வோர் அனைவருக்கும் புலப்படும். சின்னாட்கள் செல்லச்செல்ல, அக்குழந்தை இரண்டாவதாக உச்சரிக்கப் பயிலும் சப்தம் உ என்பது தான். இன்னும் சின்னாட்கள் செல்ல, அக்குழந்தை ம் என்ற சப்தத்தையும் மூன்றாவதாக உச்சரிக்கின்றது. இம் மூன்று சப்தங்களையும் உச்சரிக்கப்பயின்றபின்னரே, மற்றசப்தங்களில் பழக ஆரம்பிக்கின்றது. அ, உ, ம், இம்மூன்றுசப்தங்களும் தனி இயற்கைச் சப்தங்கள்; ஆதலால், இவை முதன்முதலில் தாமாகவே வெளிவருகின்றன. ஒரு குழந்தை முதன்முதலாவதாகக் கூறும் சொல் அம்மா என்பதாம். தாயினிடத்துச் சேய்க்கு அன்பு இயற்கையாதலால், அவ்வார்த்தை முதன் முதலில் குழந்தையின் வாயிலிருந்து உண்டாகின்றது என்று பலரும் கூறுவர். ஆனால் யோசித்துப்பார்க்குமிடத்து அம்மா என்ற சப்தம் ஓம் என்றசப்தத்தின் ஒரு மாறுபாடேயாகும். “ஓம்” என்ற சப்தத்திலிருந்து உண்டாகின்றது உலகமென்று கூடச்சொல்லலாம். அ, உ, ம் இந்த மூன்று சப்தங்களையும் கூறத்தொடங்கிய குழந்தை அம்ஆ என்று நீட்ட ஆரம்பிக்கின்றது. குழந்தை அம்ஆ என்று என்றைக்கு நீட்ட ஆரம்பித்து விட்டதோ அன்று முதல்உலகமும் அதற்கு நீண்டுவிரியத் தொடங்கிவிட்டது; அன்று முதல் அது உலகக்கட்டுக்கு உட்பட்டுக்கொண்டது.

* * *

பிரணவத்தியானமே ராஜயோகமாம். எல்லாச்சத்தங்களையும் ஒன்றாயுருக்கி ஏகசப்தமாக்கி “ஓம்” என்ற ஓரேசப்தத்தை நாம் கேட்கவேண்டும். நித்தியசப்தமாகிற “ஓம்” என்றசப்தமே நிர்மலாநந்தத்தைக் கொடுக்கக் கூடியது. வேற்றுமையையுண்டாக்கப்பட்ட பிறசத்தங்களையெல்லாம் கேட்பதற்கு நாம்மறுத்து விடவேண்டும். “ஓம்” என்ற சப்தம் ஒன்றே ஒற்றுமையை உண்டாக்கி, உண்மையை விளக்கி உயர்வைக்கொடுத்து உபசாந்த பதவியையும் அளிக்கவல்லது. எங்கும் ஏகமாக முழங்குகின்ற சப்தம்

இதுவேயாயிருந்தும், நாம் நமது அறியாமையினுல், பிராந்தியி னுல், பிரபஞ்சப்பித்தினுலுண்டாகிய மயக்கத்தினுல் நமக்குச் செவிகளிருந்தும் கேட்கின்றோமில்லை: செவிகளிருந்தும் செவிடர் களாகவே யிருக்கின்றோம்.

நாமும் "சுதேசமித்திர"னும்.

திருவள்ளுவ நாயனுரின் சரித்திரத்தையாவது தமிழ்ப் பாஷையின் சிறப்பைப்பற்றியாவது தனித்தமிழில் வியாசம் எழுதி யனுப்புவோர்க்கு ரூபா ஐந்து இனும் கொடுப்பதாக நாம் நமது ஆடி மாதத்திய "ஞானபாநு" வில் வெளியிட்ட விளம்பரத்தை நம்நாட்டில் உலாவும் மற்றையத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் அனுப்பிப் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொண்டோம். "சுதேசமித் திரன்" பத்திரிகையின் அதிபர் உடனே நமக்கு ஒருகடிதம் எழு தினர். அக்கடிதம் பின்வருமாறு:—

Frem — 6—8—1915

The Swadesamithran Office
P. O. Box No. 126
Madras.

To
The Editor & Proprietor
Gnanabanu
Mylapore, Madras.

Dear Sir.

தங்கள்லெட்டருடன் அடக்கம் செய்தனுப்பியுள்ள மாட் டரை யெமது பேபரில் பிரசுரம் செய்ய தினப்பதிப்புக்கு மாதம் 1 க்கு 8 ரூபாயும் வாரமும்முறைப் பதிப்புக்கு 5 ரூபாயும் குறைக் தசார்ஜாகும். மேற்படி சார்ஜை அனுப்பிவித்தால் விளம்பரம் உடனே பிரசுரம் செய்யப்படும்.

இப்படிக்கு
T. S. Visvanathan
புரோப்ரைடர்.

ஆங்கிலம் தெரியாத தமிழர் நமதுவாசகர்களில் அநேகர் இருப்பாராகையால் அவர்கள் இக்கடிதத்தைத் தெளிவாகப் படி

த்து அறிந்துகொள்ளும் பொருட்டும் இந்தக் கடிதத்தை ஆங்கிலம் கலவாத தமிழில் எழுதுதல் சுலபமென்று சுதேசமித்திரன் பத்திராதிபர் தெரிந்துகொள்ளும் பொருட்டும் நாம் அக்கடிதத்தை ஆங்கிலம் கலவாத தமிழில் எழுதுகின்றோம். அதுபின்வருமாறு:—

"சுதேசமித்திரன்" கார்யஸ்தலம்
சென்னை. 6—8—1915.

பத்திராதிபரவர்கள்
"ஞானபாநு"
மைலாப்பூர், சென்னை.

அன்பார்ந்த ஐயா,

தங்கள் கடிதத்துடன் அடக்கம் செய்தனுப்பியுள்ள விஷயத்தை யெமது பத்திரிகையில் பிரசுரம்செய்ய தினப்பதிப்புக்கு மாதம் 1 க்கு 8 ரூபாயும் வாரமும்முறைப்பதிப்புக்கு 5 ரூபாயும் குறைந்த விகிதமாகும். மேற்படி விகிதத்தை அனுப்புவித்தால் விளம்பரம் உடனே பிரசுரம் செய்யப்படும்.

இப்படிக்கு
டி. எஸ். விஸ்வநாதன்,
சொந்தக்காரர்.

இக்கடிதத்துக்கு நாம் மறுமொழி பின்வருமாறு எழுதினோம்: நமது கடிதம்:—

"ஞானபாநு" ஓம் மைலாப்பூர், சென்னை.
8—8—1915.

ம-ா-ா-ஸ்ரீ

பத்திராதிபரவர்கள்
"சுதேச மித்திரன்"
சென்னை.

ஐயா,

தங்களுடைய 6-8-15 கடிதம் வரப்பெற்றோம். முன்பு தங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த எமது கடிதத்துடன் அடக்கம் செய்து அனுப்பப்பட்டிருந்த "இனம் ரூபா ஐந்து" என்ற விஷயம் எமக்கு எவ்விதத்திலும் லாபம் கொடுக்கக் கூடியதன்று. பிறபாஷைச் சொற்களைக் கலவாமல் தனித்தமிழில் எழுதுவோருக்கு இனாம்கொடுப்பதால், நம்மவரைத் தமிழ்ப்பாஷையிலேயே எழுதும்படி தூண்டலாம் என்பதே எமது நோக்கம். இதைத்

தாங்கள் ஊதியம் தரத்தக்கதோர் விளம்பரம் எனக்கருதி, தங்களுடையபத்திரிகையில் பிரசுரிப்பதற்குக் கூலிகேட்டது எமக்கு ஆச்சர்யமாயிருக்கின்றது. 'சுதேசமித்திரன்' சுபாஷைக்கும் மித்திரனுயிருக்கும் என்றே இதுகாறும் நினைத்திருந்தோம். இப்பொழுது தங்களுடைய கடிதத்தின்மூலமாக எமக்கு இவ்விஷயத்தில் ஒரு பெருஞ்சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

தமிழ்ப் பாஷையைத் தனிப்பாஷை யென்று தமிழ்ப்பண்டிதர்களிற் பலரும் மண்டை யுடைத்துக் கொள்கிறார்கள். ஆனல் இப்பொழுதோ, தமிழர்களுக்குள் பெரும்பான்மை யாக வழங்கி வரும் மிக்க பத்திரிகைகளும் தமிழ்ப் பாஷையைச் சித்திரவதை செய்கின்றன. இது மிகவும் விசனிக்கத் தக்கது. தங்களுடைய பத்திரிகைக்குத் தான் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். ஆகையால் தமிழ்ப் பாஷையை ஆதரித்துக் காப்பதற்குத் தாங்களும் தங்களுடைய பத்திரிகையுமே முன் நிற்கவேண்டும்.

ஆகையால் மேற்படி "இனம் ரூபா ஐந்து" விளம்பரத்தை தங்களுக்கு இஷ்ட மிருந்தால் தங்களுடைய பத்திரிகையில் பிரசுரிக்கவும்.

தங்கள் உண்மையுள்ள

சுப்பிரமணிய சிவம்,

பத்திராதிபர்

இக்கடிதம் எழுதிவிட்டு, சுதேசமித்தி ரனில் மேற்படி விளம்பரம் வெளியாகும் என்று எதிர்பார்த்து ஒரு மாதம் வரையில் காத்துக் கொண்டிருந்தோம். ஆனல் அது வெளியாகவே யில்லை. பின்னர்த்தான் நமது புரட்டாசி மீ" த்து "ஞானபாநு" வில் நாம் இவ்விஷயத்தைப் பற்றி எழுதும் பொழுது "சுதேசமித்திர" னைக் கண்டித்து எழுதினேம். சென்ற சில வருஷங்களாக நாம் "சுதேசமித்திர" னைக் கவனித்து வருகின்றோம். அதன் பாஷா நடையையும் நோக்கங்களின் போக்கையும் பற்றிப் பலதடவைகளிலும் மிக மிக வருந்தி யிருக்கின்றோம். ஆயினும், சென்ற அநேக வருஷங்களாக "சுதேசமித்திரன்" நமது தமிழ்நாட்டில் அறிவைப் பரப்பி ஜன சமூகத்தை விழிக்கச் செய்திருக்கின்ற பெரும் முயற்சிகளை நினைத்து நாம் இதுகாறும் பொறுத்துக் கொண்டிருந்

தோம். "சுதேசமித்திரன்" பத்திராதிபரா யிருந்த பிரஹ்மஸ்ரீ ஜி.சுப்பிரமணி யய்யாவர்க ளிடத்தில் நமக்கு அளவற்ற மதிப்பு உண்டு. இவர் நமது தமிழ் நாட்டிற்கு அளவற்ற நன்மைகள் செய்திருக்கின்றார் என்பது எவராலும் மறுக்கக் கூடாததொரு காரியம். தேசாபிமானமும் பாஷாபிமானமும் இன்னவையென்று எவரும் உணராத அக்காலத்தில், அதாவது, "சுதேசமித்திரன்" ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் பிரஹ்ம ஸ்ரீ சுப்பிரமணி யய்யாவர்கள் தாம் நடத்திக் கொண்டிருந்த "ஹிந்து" என்ற ஆங்கிலப் பத்திரிகையை விடு விட்டுச் சாதாரண ஜனங்களுக்குள் அறிவைப் பரப்பும் பொருட்டுத் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தது மிகவும் விபக்கத் தக்கதே. ஆனால் இப்பொழுது ஜன சமுகம் விழித்துக்கொண்டு விட்டது. தேசாபி மானமும் பாஷாபிமானமும் எங்கும் பெருகி வருகின்றன. நமது தேசம், நமதுபாஷை என்ற எண்ணம் எங்கும் உண்டாயிருக்கின்றது. ஆகலால் "சுதேசமித்திர"னுடைய நடையும் தன்மையும் இப்பொழுது நல்வழியில் சீர்திருத்தப் படவேண்டும். அப்படிச் செய்யாமல், "முயலுக்கு மூன்றேகால்" என்ற பழமொழிப்படி ஒருபிடிவாதமாக, "சுதேசமித்திரன்" தன்னுடைய பழபபாஷா நடையையும் தன்மையையுமே அநுசரித்து எழுதிவருமானால், அது செய்யவேண்டியவேலை செய்து முடிந்தாய்விட்டதென்றும் இனிமேல் அதற்கு நமது தமிழ்நாட்டில் வேலையில்லை யென்றும் நாம் விசனத்துடன் வெளியிடவேண்டியிருக்கின்றது.

5—7—15-ல் வெளியாகிய "லோகோபகாரி"யில் ஸ்ரீமாந். சுப்பிரமணியசிவம் அவர்கள் "சுதேசமித்திர"னுடைய நடையைப்பற்றிக் கண்டித்து ஒரு நிருபம் எழுதியிருந்தார். "சுதேசமித்திரன்" அதைக்கவனிக்கவேயில்லை. நமது பத்திரிகை மாதப் பத்திரிகையாகையினால் நாம் இவ்விஷயத்தைப்பற்றி எழுதுவதற்கு ஏற்றபத்திரிகையன்றென்று வாளாவிருந்தோம். ஆனால் மற்றதமிழ்ப்பத்திரிகைகளின் அதிபர்களிடத்தில் நாம் இதைக் குறித்துப்பேசினதில், அவர்களில் மிக்கோரும் "சுதேசமித்திர"னைப்பற்றிக் கண்டித்தெழுதுவதற்குப் பின்வாங்கினர். இப்படிச் சிலமாதங்கள் செல்ல, நமது "இனம் ரூபா ஐந்து" விஷயம் வெளியாகி நம்மை 'சுதேசமித்திர' னுடன் போர்தொடங்கும்படி இழுத்துவிட்டது. நாம் "சுதேசமித்திர"னுடைய நடையைப்

பற்றிச் சிலகண்டனக்குறிப்புகள் கூற, 1 - 10 - 15, 8 - 10 - 15, 15-10-15 இம் மூன்று தேதிகளிலும் வெளிவந்த 'சுதேசமித்திரன்' பத்திரிகைகளில் "பாரதபுத்ரன்" என்னும் ஒரு நண்பர் "சுதேசமித்திர"னுடைய நடையை ஸ்தாபித்தும் "ஞானபாநு"வைக்கண்டித்தும் நீண்ட நிருபங்கள் எழுதியிருக்கின்றார்.

இந்த "பாரதபுத்ரன்" அவர்களுடைய நிருபத்திற்குப்பதிலொன்று ஸ்ரீ மாந். வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் எழுதி எல்லாத்தமிழ்ப்பத்திரிகைகளிலும் பிரசுரித்திருக்கின்றார். ஆதலால் நாம் இப்பொழுது பெரியதோர்மறுப்பு ஒன்றும்பலமாக எழுத வேண்டிய அவசியமில்லை. 'பாரத புத்திரன்' அவர்கள் நமது அபிப்பிராயங்களை நன்றாகக் கிரகிக்கவில்லை யென்றுதோன்றுகிறது; ஆங்கிலச் சொற்கள் கலவாத தமிழ் எழுதவேண்டுமென்று எப்பொழுதும் நாம் கூறிவருகின்றோமே யொழிய சமஸ்கிருதச் சொற்களும் கலவாததனித்தமிழ் எழுதவேண்டுமென்று நாம் ஒருபொழுதும் கூறினதில்லை. சமஸ்கிருதச் சொற்களே கலவாத தனித்தமிழில் எல்லோரும் சர்வசாதாரணமாக தற்காலத்தில் வியாசங்கள் எழுதமுடியு மென்று நாம் நினைக்கவில்லை. ஆனால் தமிழ்ப்பாஷை தனிப்பாஷை யென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. தமிழர்களுக்கு ஆரியர்களுடன் ஏற்பட்ட நெடுநாட்பழக்கத்தால், எண்ணற்ற சமஸ்கிருதச் சொற்கள் தமிழர்களுக்குச் சாதாரணமாய்விட்டன. சமஸ்கிருதச் சொற்கள் கலவாமல் தனித்தமிழில் வியாசங்கள் எளிதில் எழுதமுடியு மென்றால், நாம் அப்படி எழுதுவோருக்கு இனாம் கொடுப்பதாக விளம்பரம் செய்வோமா?

"இங்கிலீஷ் தெரியாத தமிழன் நம் நாட்டில் தடவியெடுத்தாலும் அகப்படுவது அருமை" யென்றார் பாரதபுத்திரனார். இந்த நிருபம்வெளிவந்த 1-10-15 "சுதேசமித்திர"னிலேயே "சுவராஜ்ஜியமும் மெட்ராஸ் மெயில்பத்திரிகையும்" என்ற பெயரோடு கூடிய தலையங்கத்தில் "இந்தியன் ஸிவில் சர்விஸ் அடங்கிய பியுராக்கிரஸியின் ஆட்சியால் இந்தியா தேசத்தில் குறைகளில்லாமலும் கஷ்டங்கள் இல்லாமலும் இருக்கின்றனவா?" என்னும் வாக்கியம் காணப்படுகின்றது.

பியுராக்கிரஸி என்றவார்த்தைக்குச் சரியான அர்த்தம்இன்னதென்று ஆங்கிலம் கற்றவர்களிலேயே அநேகர் அறியாரென்று

நினைக்கிறோம்; அப்படியிருக்க தமிழ்மாத்திரம் கற்றுள்ளவர்களில் எத்தனைபேர்கள் இப்பதத்தைக் கிரகித்திருப்பார்கள்? ஒவ்வொன்றும் உள்ளிலிருந்தே வளர்ச்சிபெறவேண்டுமென்பது சிருஷ்டி நீதி. வெளியிலிருந்து கடன்வாங்கிச் சேர்த்தலால் வளர்ச்சி எற்படாது. இன்னும் தமிழ் பூரணவளர்ச்சிபெற்ற பாஷையென்று பாஷாபரிசோதகபண்டிதர்கள் கூறுகின்றார்கள்.

"பாரத புத்ரன்" அவர்களே! சில ஆங்கிலப்பதங்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள் தங்களுக்குத் தெரியாவிட்டால் தமிழ்ப்பாஷையிலேயே சொற்கள் கிடையாவென்று சொல்லிவிடலாமா? சில ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான சொற்களை ஸ்வபாஷையில் நூதனமாக உண்டுபண்ணுதற்குத் தங்களால் முடியாவிட்டால் எவராலும் முடியாது என்று கூறுவது என்ன நியாயம்?.

ஷிவாஜி மகாராஜர் மகாராஷ்டிர தேசத்திற்குச் சக்கரேஸ்வானக முடிசூட்டிக்கொண்டவுடன் முதலாவது அவர் செய்தது யாதெனில், மகாராஷ்டிரபாஷைப்பண்டிதர்கள், பாரசீகபாஷைப் பண்டிதர்கள் முதலியவர்களிற் பலரையும் ஒன்றுசேர்த்து ஒரு சங்கம் எற்படுத்தி, மகம்மதியர்களுடைய நெடுங்காலச் சேர்க்கையினால் மகாராஷ்டிரபாஷையில் வழக்கச்சொற்களாயிருந்த பாரசீகபாஷைச் சொற்களையெல்லாம் அடியோடுநீக்கிவிட்டுத் தனித்த மகாராஷ்டிர பாஷைச் சொற்கள்மாத்திரம் அடங்கிய அகராதியொன்றை அச்சங்கத்தினால் செய்வித்தாரென்று சரித்திரம் கூறுகின்றது. இதுவல்லவோபாஷாபிமானம்.

நமது நண்பர் ஒருவர் இப்பொழுது அயர்லாந்து தேசத்தின் ராஜதானியாகிய டப்ளின் மாநகரத்தில் வசித்து வருகிறார். அவர் நமக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு வரைகிறார். "இரண்டு வாரங்களுக்கு முன் நாங்கள் ஸ்காத்லாண்டில் ப்ரிட்ஜ் ஆப் ஆலன் என்னும் சிறந்தவூரில் ரெவரெண்டு டாக்டர் மில்லரவர்களுடன் இந்திய விஷயங்களைப்பற்றிப்பேசியபொழுது சுதேசபாஷையை இகழ்ச்சிசெய்வது மதராஸ் ராஜதானியின் முக்கிய துர்க்குணம் என்று அபிப்ராயம் கூறினர்". நிபுணர் மில்லரவர்களுடைய பெயரை எல்லோரும் கேட்டிருப்பர். இவர் இச் சென்னைமாநகரிலுள்ள கிறிஸ்தவன் கல்லூரியில் தலைவராகநெடுங்காலம் இருந்து தென்னிந்தியாவில் கல்வி அபிவிருத்தியாகும்

பொருட்டு வெகுபாடுபட்டார். இப்பொழுது இவர் தமது ஸ்வதேசத்தில் சுகமே காலங்கழித்துவருகிறார். இந்தியரையும் இந்திய பாஷைகளையும்பற்றிச் சிறிதும் அறியாது, அடிக்கடி மாறுதலேயே இலக்கணமாகவுடைய ஆங்கிலபாஷையில் பாண்டித்தியம் பெற்ற நிபுணர் ஸேய்ஸ் என்பவருடைய அபிப்பிராயங்களைப்பார்க்கிலும் இந்தியர்களையும் இந்தியப்பாஷைகளையும் பற்றி, அதிலும் தமிழரையும் தமிழ்ப்பாஷையையும் பற்றிநன்ருக அறிந்துள்ள நிபுணர் மில்லரவர்களுடைய அபிப்பிராயமே பெரிதும் மெச்சத்தக்கதும் விரும்பத்தக்கதுமாம்.

நமது இன்னொரு நண்பர் சமீபத்தில் ஹரித்துவாரத்திற்குச் சென்றிருந்தார். அவர் எழுதிய வொருசடிதத்தில் சிலவாக்கியங்கள் பின்வருமாறு:—வட இந்தியாவில் உத்தியோக முறையில் தவிர, மற்று எப்பொழுதும் எவரும் ஆங்கிலம் பேசுவதில்லை. ஆங்கிலக்கல்விகற்று பெரியபரீட்சாபட்டம் பெற்று உயர்பதவியில் இருப்பவர்கள் கூட தாங்கள் ஒருவருக்கொருவர் சம்பாஷிக்கும்பொழுது ஸ்வபாஷையில் தான்பேசிக் கொள்கிருர்கள். இங்குள்ள வெள்ளைக்காரர்களும் இந்தியர்களுடன் சம்பாஷிக்கும் பொழுது ஹிந்திபாஷையில் தான்பேசுகிருர்கள்". 'பாரதபுத்ரன்' அவர்களே! வட இந்தியாவிலுள்ள பாரதபுத்திரர்களுக்கும் தென்னிந்தியாவிலுள்ள பாரதபுத்திரர்களுக்கும் எத்தகையவித்தியாசம் இருக்கின்றது? பார்த்தீர்களா?

தமிழ்ப் பண்டிதர்களே! தமிழ்மகா ஜனங்களே! ஜாக்கிரதை, ஜாக்கிரதை! உங்களுடைய பாஷையைக் காப்பாற்றுங்கள். ஒரு ஜனசமுகத்திற்கு உயிர் அதன்பாஷைதான். தமிழ்ப்பாஷையழிந்துவிட்டால், தமிழர்களின் சிறப்பும் சீரும் அழிந்துவிடும். தமிழ்ப்பாஷையில் தேவையானபதங்கள் இல்லையென்று வாய் கூசாமல் கூறுகின்ற பாரதபுத்ரர்களுக்கு அப்பதங்களை யாராய்ந்து கண்டுபிடித்துக் கற்றுக்கொடுங்கள்; சரியானபதங்கள் இல்லையேல், தமிழ் வாணியின் கிருபைகொண்டு இன்னும் அநேககாரணப் பெயர்களையாக்கிக்கொடுங்கள். உங்கள் நா தமிழேபேசுக, நீங்கள் கையிலேந்தும் இறகு தமிழே எழுதுக; உங்களுடைய ஹிருதயம் தமிழையே நாடுக; உங்களை யெல்லாம். தமிழ்மாதா தயையுடன் ரட்சித்திடுக.

விக்ரஹாராதனச் சிறப்பு.

(முன்தொடர்ச்சி).

நிலையற்றதும், இம்மையில்மட்டும் (அறிவின்மையால்)சிறிது இன்பம் போலத் தோன்றுவதும் ஆகிய மண், பெண், பொன் முதலியவற்றினிடத்து அன்பும், அதனைப் பெறுவதில் இடையறு முயற்சியும் புரிவதென்றால், அழிவற்றதும, இம்மை, மறுமை, ஆகிய இருமையிலும், அளவற்ற பேரின்பத்தை யளிப்பதும், அருட்பெருங்கடலும் ஆன எம்மிறைவனிடத்திலும், அவனை யடைய முயற்சிப்பதிலும், ஒவ்வொருவருந் தத்தம் வாழ்நாள் முற்றிலும் செலவு செய்து தொண்டு புரிந்தாலும் போதாதே?

அவ்வாறிருக்க எவ்வளவோ அறிவிலிகள் நாஸ்திகம் பேசி நாத்தழும் பேறப்பிதற்றித் திரிகின்றனரே! ஐயோ! இவர்கள் நல்வழிப்பட் டுய்வதெப்பொழுதோ?

இங்கு விக்ரஹாராதனத்தின் பெருமை நன்கு விளங்குகின்றது.

இம்மையில் நமக்குத் தோன்று மின்பமெல்லாம் வெறுங் கானல் நீர்போன்ற தன்றோ?

இக்கானல் நீரை யடைவதற்காக நாம் எவ்வளவு தூரம் நமது வாணளை வீணளாக்குகின்றோம்? எவ்வளவு வீண் செய்கைகளைக் கைக்கொள்ளுகின்றோம்?

நாம், நமது, என்று பிதற்றித் திரிகிற இந்த எண்சாணுடம்பை வெறுத்துத்தள்ளி, வெளியேறுங்கால் நம்முடன் வருவதுமொன்றுண்டோ? அப்பொழுது நாம் இறைவனை நோக்கிச் செய்துள்ள தூய செய்கைகள் ஒன்றே அழிவின்றி நம்முடன் பின்பற்றுவதன்றி, நமக்களவற்ற பேரின்பத்தையும், அளித்தற்கு உதவியாயிருக்கிறது. என்பதனை யறிந்து அதனையன்றோ? மிகுந்த ஊக்கத்துடனும், முழுமனதுடனும், மிகக்களிப்புடனும் இடைவிடாது கைக்கொள்ளவேண்டும்.

கடவுள் வழிபாட்டின் பெருமையை எடுத்துக்கூற எவராலியலும்? நமது ஐம்பொறிகளையும் வீணிற் செல்லவிடாது, இறைவனிடத்துச் செலுத்துவது விக்ரஹாராதன மொன்றே!

இறைவன் பொருட்டுக் கடவுள் வடிவமாகக் கருதி ஸ்தாபிக்க (நாட்ட) ப்பட்டுள்ள விக்ரஹம் (சிலை) எவ்வளவு தூயது; அதனை யன்பர்கள் பலவிதமான உபசாரங்கள் செய்து வழிபடுகின்றார்கள்; எதனினும் மேலான செய்கை இறைவனைப் போற்றுவதே; ஆதலால் இந்த மேலான நிலையை ஒவ்வொருவரும் அடைய முயலுங்கள்!

இறைவனைப் போற்றி வழிபடும் அன்பரது மனம் வீணான பொருளை நாடவில்லை; மேலான பரம்பொருளை நாடுகின்றது அவரது வாக்கானது தீயசொற்களை வழங்கவில்லை; பெருமைதங்கிய மந்த்ரங்களை ஜபிக்கின்றது. அவ்வாறே மற்ற அவயவங்களும் தீச்செயல் யாதொன்று மின்றி அனைத்தும், ஈச்வர கைங்கர்யத்தைச் செய்கின்றன; உடல், பொருள், ஆவி மூன்றும் இறைவன் பொருட்டு அர்ப்பணம் செய்யப்பட்டு விடுகின்றன; மன, மொழி, மெய்களால் இறைவனுக்குத் தொண்டு புரிகின்றோம். இவற்றின்பயன் அளவும், அழிவும் அற்ற பேரின்பப்பேற்றை யடைவதே.

இவ்வளவு மேன்மைதங்கிய விக்ரஹ ரூபமான ஈச்வர ஆராதனத்தைச் சில அறிவிலிகள் அலக்ஷ்யஞ்செய்கிறார்கள். ‡ "மனையாளுமக்களும், வாழ்வுந் தனமுந் தன்வாயின்மட்டே" என்பதை ஓர் சிறிதும் ஓராது,

‡ "நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நலமொன்று மறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கவட்டுத்தொன் மரத்திடுக்கிற் காலுழைத்துக்கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்குபோல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே".

என்றபடி யுழலுகின்றார்கள். எண்சாணுடம்பைப் போற்றும் பொருட்டு மதிமயங்கி இரவு பகலாய்ப் பாடுபடும் அறிவிலிகள், இறைவனை வழிபடும் அன்பர்களைப்பழித்தல் தகுமோ? இதுவியப்பினும் வியப்பே! அந்தோ! என்னே இவர்கள் மடைமை? இவர்

‡ பட்டினத் தடிகள்.

கட்கு இயற்று மாற்ற லற்றிருப்பினும், நற்செய்கை செய்வோரைப் பழித்து, ஏனோ, இவர்கள் பாபத்தைச் சுமக்கிறார்கள்?

ஆயினும், இவர்களும் துன்பம்வந்த காலத்து ஓ! வென்றலரி முறையிடுகின்றார்கள். அப்பொழுதும் இறைவன் இவர்களைக் காத்து அறிவுறுத்துகின்றார். அப்பொழுதுதான் இதுவரையில் தமதுவாணாள் அவலமாய்க் கழிந்ததை நோக்கிப் பிறகு உளம் வருந்துகின்றனர்.

"இறைவனைக் குறித்து அவன் வடிவங்களான பிம்பங்களை ஆராதித்தல் பிழை" யென்றும், "அங்கிங் கெனாதபடி யெங்கும் நிறைந்துள்ள கடவுளை, ஒரு விக்ரஹத்திலிருப்பதாய் எண்ணி வணங்குதல் மடைமை" யென்றும் சில நாகரீக சிகாமணிகள் நவில்கின்றனர்.

ஆயின், எங்கும் நிறைந்த இறைவன் விக்ரஹங்களில் மட்டும் இல்லையென்பது இவர்கள் ஸித்தாந்தமோ? ஸூர்யகிரணங்கள் எங்கும் ஒரேமாதிரியாகப் பரவி யிருப்பினும், ஓர் அறைக்குள் சென்றால், முழு இருளாகவும்; கூடத்தில்வந்தால், சிறிது வெளிச்சமும்; தாழ்வாரத்தில் வரக் கொஞ்சம் அதிக ஒளியும்; முற்றத்தில் இறங்கினால், பின்னும் அதிக வெயிலும்; அவ்வொளியை ஒரு கண்ணாடி மூலமாய் முகத்திற் படும்படி பிடித்துப் பார்க்கின், காணக் கண் கூசும்படியாகவும் ப்ரதிபிம்பிப்பதைப் பார்க்கிறோமன்றோ?

அவ்வாறே இறைவனது அருளானது அறிவிலிகளிடம், இருளாகவும்; அன்பு தோன்றச் சிறிது வெளிச்சமும்; அறிவு தெளியக் கொஞ்சம் அதிக ஒளியும்; இறைவன் புகழைப் பாடித்துதிக்கப், பின்னும் அதிக ஜோதியும்; இறைவனை ஓரிடத்திற் ப்ரதிஷ்டித்து ஆராதிக்கின், மிகுந்த இணையற்ற ப்ரகாசத்துடனும் ஒளி வீசுகின்றது.

நீ வேறு, நான்வேறு, அவர்வேறு என்ற வேற்றுமை எண்ணம் நீங்கி நீ, நான், அவர் அனைவரும் ஒன்றே என்ற மேலான "ஸமரஸ" பாவனை உண்டாகி "கடவுளே நான், நான் கடவுளே; கடவுளின்றி, நானில்லை" என்ற எண்ணம் உளத்திற் பதிந்து, (நான், எனனுடையது, அதாவது, அஹங்கார, மமகாரங்கள் அற்று) விட்டால் முற்றத்தில் நின்றமனிதன் அப்படியே

நிமிர்ந்து பார்த்து ஸூர்யன் ஒளியை உள்ளபடி யறிந்து அத்துடன் ஒன்றுபடுவதை யொக்கும்.

அறிவிலிகள் ஆந்தைக்கு நிகர். ஒளி அதிகரிக்க அதிகரிக்க ஆந்தைகள்போல் பொந்துகளிற் பதுங்கிக் கண்களையும் மூடிக்கொள்வார்கள்.

அதிருக்கட்டும், விக்ரஹாராதனத்தைப் பிழையென்று தூற்றும் இம்மேதாவிகள் நிலையற்ற வுடலையும், மண், பெண், பொன் முதலிய தோன்றிவிளங்கி யழிவுறும் அற்பப் பொருள்களையும், ஏன் போற்றி வளர்க்கவேண்டுமோ தெரியவில்லையே?

தம்மிடத்து நட்புரிமை பாராட்டும் மனிதர்களுடைய உருவங்களை (போடோக்ராப்—புகைப்படம்) மட்டும், ஏன் இடைவிடாது வைத்துக்கொண்டு களிக்கிறார்கள்? இவர் நண்பரதுபடத்தில் நண்பரே யிருக்கிறாரோ? அல்லது இவரது நண்பர் ஈச்வர லக்ஷணம் (ஸர்வவ்யாபி) வாய்ந்தவரென்று கருதியோ? இல்லையே? அவ்வாறிருக்க, அந்தப்படத்தினால் இவருக் கென்னபயன்? அதனையேன் கட்டிக்கொண்டழுகிறார்? அசேதனமா அப்படத்துடன் பேச்சென்ன? விளையாட்டென்ன? சிரிப்பென்ன? அழுகையென்ன? இவற்றை யது அறிந்து கொள்ளுகிறதா? யாதொரு பயனுமற்று இவர் அச்செய்கையில் ஏன் தட்டித் தடுமாறுகிறார்?

இறைவனடியவர்களோ எக்காலத்தும், அழிவில்லாததும், பேரின்பத்தை யளிப்பதுமானஈச்வராராதனத்தைக்கைக்கொண்டு இறைவன் புகழைப் பாடியாடி ஆனந்தக்கடலி லமிழ்ந்துல்லாஸிக்கிறார்கள்.

அடியவர்கள் தமது அளவற்ற பேரன்பைக் குறிப்பிட இறைவனை விக்ரஹ ரூபமாய் ப்ரதிஷ்டித்துப் பூஜிக்கிறார்கள். அன்பே யுருவான இறைவனும் அதனையங்கீகரித்து, மனமகிழ்ந்து, அருள் சுரந்து, கடாக்ஷிக்கின்றார்.

இதனால் மெய்யன்புடைய அடியார்கள் ஜீவன் முக்தர்களாய், உயர்வற உயர்நல மமைந்த பேரின்பவாழ்வெய்துகின்றார்கள்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாடொழாஅ ரெனின்" (திருக்குறள்)

மெய்யறிவுடைய கடவுளை வணங்காராகிற் கற்றதாலடையும் பயனியாது? என்று நமது மெய்ப்புலவர் கூறியுள்ள உபதேசத்தை நன்குணர்ந்து அனைவரும்,

"விக்ரஹாராதனத்தை, விரைவிற் கைகொண்டு வாழ்க!"

சுபம், ஓம்!

கங்கா ஜடேச சர்மா.

நாமும் "பூரணசந்திரோதயமும்."

மதுரையில் நடைபெறும் "பூரணசந்திரோதயம்" என்னும் மாதப்பத்திரிகையைப் பற்றியுள்ள நமது அபிப்பிராயத்தை நாம் நமது சென்ற புரட்டாசிமீ "ஞானபாநு" வில் வெளியிட்டிருந்தோம். இதுபற்றி "பூரணசந்திரோதய"த்திற்கு நம்மீது ஒரு சிறியகோபம் உண்டாயிருக்கிறதுபோலத் தோன்றுகிறது. அது பின்வருமாறு எழுதியிருக்கின்றது. "ஞானபாநுவும், லோகோபகாரியும்:— தியாசபியில் தமக்கிருக்கும் துவேஷத்தை சாடைமாடையாக வெளியிடுகிறார்கள். லோகோபகாரிக்கும், ஞானபாநுவுக்கும் துவேஷமென்பது பெரிய இடையூறாகும். ஞானத்தைப் பரவச்செய்து லோகத்திற்கு உபகரிக்கவேண்டுமாயின், ஸமதரிசன புத்தியுள்ள குணக்ராஹிகளாய் நடைபெறவேண்டும்." நன்று! நன்று! யார் யாது உரைத்தபோதிலும், மனச்சாட்சியின் கூற்றை மறைத்து வைத்துக்கொண்டு "சரி, சரி, சரி" என்று பல்லவிபாடி ஆஷாடபூதிவேஷம் போடுமாறு "பூரணசந்திரோதயம்" நமக்குப் போதிக்கின்றது. உறங்கிக் கொண்டிருந்த குழந்தையின் தொடையைக் கிள்ளிவிட்டு, அது அழும்பொழுது அதை அடிப்பது நியாயமாகுமா? வாய்மூடிக்கொண்டு வாளாவிருந்த நம்மை தன்னைப்பற்றி நமக்குள்ள அபிப்பிராயத்தைக் கூறுமாறு பூரணசந்திரோதயமே கேட்டுவிட்டு, நாம் நமது மனத்திற்பட்ட உண்மையான அபிப்பிராயத்தைக் கூறியபொழுது, துவேஷத்தினால் கூறினோமென்று பூரணசந்திரோதயம் எழுதத்துணிந்தது எத்தகைய நியாயமோ? மேற்படி பத்திரிகையின்மீது, நமக்கு துவேஷமுண்டாகக் காரணம் என்னை? "ஞானபாநு" ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், நம்மைப்பற்றி "பூரணசந்திரோதயம்" அபிப்பிராயம் கூறியபொழுது,— ஈஸாவாச்யோபநிஷத் அப்பொ

முது ஸ்ரீமான். சி. சுப்பிரமணிய பாரதியவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டிருந்தது—முன்னமேயே மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ள இந்த உபநிஷத்துக்களைத் திரும்பவும் மொழிபெயர்ப்பதைப் பார்க்கிலும் மொழிபெயர்க்கப் படாத நூல்கள் எத்தனையோ இருக்கின்றன, அவற்றையெல்லாம் மொழிபெயர்த்தலே சிறந்த கைங்கரியமாகும் என்ற மாதிரியில் எழுதியிருந்ததாக நமக்கு ஞாபகம் இருக்கிறது. நாம் அப்பொழுது பூரணசந்திரோதயத்தின்மீது பாய்ந்தோமா? அது தன்னுடைய ஸ்வதந்திர அபிப்பிராயத்தை வெளியிட்டது என்றுநாம் மகிழ்ந்தோம். அன்னிபெஸண்டினுடைய நூல்களும் லெட்பீட்டருடைய நூல்களுமே மொழிபெயர்க்கப் படத்தக்கனவோ?என்று நாம் கேட்டிருக்கக்கூடாதா? பூரணசந்திரன் உதயமாயினும், அதனிடத்தும் களங்கமுண்டென்று ஆன்றோர் கூறுகின்றனரன்றோ?

ஐயவினா.

கற்றுத்தேர்ந்த பெரியோர்காள்!

இவ்வைய வினாவிற்குத் தாங்கள் அன்பு கூர்ந்தளிக்கும் விடையைக் களிகூர்ந்தெதிர்பார்க்கின்றனன்.

நமதினிய தமிழ்மொழியில் "மாடு" என்ற சொல்லிற்கு வடமொழியினும், ஆங்கிலத்தினும் உள்ள சொற்களை அறிவிக்குமாறு வேண்டுகின்றனன்.

மாடு, என்பது:—ஆ, (பசுமாடு) எருது, (காளைமாடு) எருமைக்கிடாரி (பால்எருமை) எருமைக்கிடா (ஆண்எருமை.) இவையனைத்திற்கும் பொதுவாயமைந்துள்ள பெயர்.

ஆ, எருது, எருமைக்கிடாரி, கிடா முதலியவற்றிற்கு வடமொழியில் கோ, வ்ருஷபம், மாஹிஷீ, மஹிஷம் முதலியவற்றையும், ஆங்கிலத்தில் கௌ, புல்லக், (ஆக்ஸ்) பப்பெலோ முதலிய சொற்களையும் ஒருவாறாக வழங்கி வருகின்றோம். ஆனால் மேற்கூறியசொற்கள் மாடென்னுஞ் சொல்லிற்கு ஒருசிறிதும் பொருந்தியதாக எனது சிற்றறிவிற்குப் புலப்படவில்லை. ஆதலாலிதனைக் கண்ணுறுங் கற்றுத்தேர்ந்த அறிஞர்கள் 'மாடு' என்னுந் தமிழ்ச்

சொல்லுக்குத் தாங்களறிந்துள்ள பிறமொழிகளிலுள்ள சொற்களை இஞ்ஞாயிற்றின் (பாநுவின்) வாயிலாகவே தெளிவாய் விளக்கக் கோருகின்றனன்.

அன்பன்,
கங்கா ஜடேச சர்மா.

குறிப்பு.

மேற்குறித்த வினவிற்கண்ட மாடென்னுஞ் சொல்லிற்கு வடமொழி, ஆங்கிலமிவற்றில் மட்டுமன்றி தெலுங்கு, கன்னடம் மலையாளம், துளுவம், வங்காளீ, உருது, ஒடியா, ஸிந்தீ, குஜராதீ, ஹிந்தீ, குருமுகீ, மராடீ, ஹிந்துஸ்தானீ, பர்மீஸ், சிங்களம், பஞ்சாபீ, ப்ராக்ருதம், பாலீ, சைனீஸ், லத்தீன், ப்ரெஞ்ச், ஜர்மன், க்ரீக் முதலிய பிறமொழிகளிலும் பயிற்சியுள்ளவர் தத்தமக்குத் தெரிந்த இன்னின்ன மொழிகளில் இவ்விவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவிக்கின் மிகுந்த நன்றியறிதலுள்ளவனாயிருப்பேன்.

ர. ஸ்ரீ. கங்காஜடேச சர்மா,
இரண்டாங்கட்டளை,
தஞ்சைஜில்லா.

அதிருஷ்டத்தை எங்கே இழந்தார்கள்.

1. வீண்பேச்சில்
2. தீரமுடிவுசெய்யாததில்
3. புராதனமுன்னோர் வழியிலேயே செல்லவேண்டுமென்பதில்
4. அரைகுறையான தீர்மானத்தில்
5. சாந்தி அடையாமல்தானே தன்மனத்தைப் புண்ணாக்கிக் கொள்வதில்
6. தினையளவுகஷ்டத்தைமலையளவாய் நினைத்ததில்
7. நம்பத்தகாதவர்களை நம்பியதில்
8. அதிவிரைவில் ஐசுவரியம் சம்பாதிக்க நாடியதில்
9. அளவுக்கு மிஞ்சிய ஆவலோடிருந்ததில்
10. அதிலகுவில் தன் திடசித்தத்தை நழுவவிட்டதில்
11. தம்முடைய தீய ஒழுக்கங்களை அடக்கமுடியாததில்

12. காரியத்தில் துரிதப்பட்டதில்
13. தம் உற்சாகத்தைத்தளரவிட்டதில்
14. தமக்கு ஒவ்வாததொழிலில் தலையிட்டதில்
15. தம்தொழிலைவிளையாட்டாக நினைத்ததில்
16. தொழிலின் நுட்பங்களை உணர்ந்து கொள்ளாததில்
17. அதிருஷ்டத்தைத்தானே வருமென்று நினைத்ததில்
18. தன்தொழிலுக்கு முன் யோசனை யில்லாமல் ஆரம்பித்ததில்
19. இஷ்டமிருந்தால்மட்டும் தொழில்செய்வதில்
20. ஜெயத்திற்குக் குறுக்குவழி தேடுவதில்
21. தம்முடைய முயற்சியில் கவனம்வைக்காததில்
22. குடியிலும், புகையிலும் முழுகியதில்
23. சிறுவெற்றியைக்கொண்டு மிகுநம்பிக்கைகொண்டதில்
34. செட்டில்லாப் பெண்ணைவிவாகம் செய்துகொண்டதில்
25. சமயம்வாய்த்தபோது காரியம்ஸாதித்துக் கொள்ளாததில்
26. கையிலுள்ள சிறுகாரியத்தைச் செய்யாமல்நாளைவரும் பெருங்காரியத்தைப்பற்றிப், பகற்கனவுகாண்பதில்
27. முழுதும் சுயநயம் பாராட்டுவதில்
28. முன்கோபத்தால் வேலைக்காரர்களைக் கொடுமைசெய்ததில்
29. பிறர்நமக்குதவிபுரிவார்களென்று நம்புவதில்
30. பணக்காரபந்துக்கள் இறப்பதில் லாபம் பெறலாமென்று எண்ணுவதில்
31. வேலையின் தன்மையைத் தெரிந்து கொள்ளாமல் அதைச் செய்யமுயலுவதில்

எங்கே ஆநந்தங்காணப்படும்.

1. நல்லசிநேகம் செய்வதில்
2. நல்ல எண்ணங்கொண்டிருப்பதில்
3. பிறர்க்குதவிபுரிவதில்
4. நட்பான கடிதங்கள் எழுதுவதில்
5. இனியவசனம் பேசுவதில்
6. சிறுவிஷயங்களிலும் உபகாரம்செய்வதில்

7. பிறர்செய்த சிறு உதவியிலும் பெரும்பக்ஷம் பாராட்டுவதில்

8. சுயநயமற்ற பரோபகாரத்தில்

9. எல்லாமனிதரோடும் கலந்திருப்பதில்

10. பரிசுத்தமான எண்ணத்தில்

11. நாம்விரும்பிய வேலையில்

12. பரஸ்பர நம்பிக்கையில்

13. தேகப்பயிற்சிக்குரிய பொழுதுபோக்கில்

14. அறிவைவிசாலப்படுத்துவதில்

15. நம்கடமையைச் சந்தோஷமாகச்செய்வதில்

16. பிறரைச் சந்தோஷப்படுத்துவதில்

17. உலகவாழ்க்கையின் லாபநஷ்டங்களைப் புன்சிரிப்போடு வகித்தலில்

18. நல்லகோரிக்கை நிறைவேறுவதில்

19. நல்லகிரந்தங்களை வாசிப்பதில்

20. நம்மாலியன்றமட்டிலும் பிரதியுபகாரம் செய்வதில்

ஒழுங்கின் பயன்.

1. பலதொழிலிருந்தாலும் புத்திகலங்காது.

2. தொழில்விர்த்தியாகும்; சிலவுகுறையும்.

3. ஒவ்வொருகாரியமும் முழுஜயமடையும்; சிரமமதிகமில்லை.

4. மனத்திற்கும் ஆநந்தமுண்டாகும்

5. சிறிதுநேரம் வேலைசெய்தாலும் அதிகவேலைசாயும்

6. நன்மைதீமை, லாபநஷ்டம், சுகதுக்கங்களைப் பகுத்தறியும் தன்மையுண்டாகும்; இதில் உலகத்தில் ஒரு நயம் தோன்றும்

7. வேலைக்காரர்களுக்கு உம்மிடத்தில் ஒரு நம்பிக்கையுண்டு

8. அநேக காரியமிருந்தாலும் குழப்பமடையாமல் ஒவ்வொன்றையும் செய்துமுடிக்க முடியும்

9. இதினால் இன்னுமதிகமான காரியங்களையுமாரம்பிக்கலாம்

10. மஹாபுத்திமான்களைக்காட்டிலும் சாதாரண அறிவுள்ளவர்கள் இதினால் அதிகவெற்றியடைவார்கள்

11. தன்னம்பிக்கையும் சுயமரியாதையு மதிகப்பட்டு இதினுல் நமக்கும் ஸாமர்த்திய மதிகப்படும்

12. ஒருகாரியத்தையே பலமுறை செய்யும்படியான அவசியம் ஏற்படாது.

13. வைத்தவிடம்மறந்து போய்த்தேடுவதில் வீண்காலம் செலுத்தாமல் நினைத்தவுடன் எடுக்க முடியும்

14. நமக்கு மநுபவமுதிர்ச்சியுண்டாகும், இதினுல் காரியக்கேடும் பொருள் நஷ்டமுமுண்டாகாது

15. உம்முடைய சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் மிகுதிப்படுவதால்பிறரும் உம்மை மதிப்பார்கள்.

16. ஒவ்வொரு காரியத்தையும் முடியச்செய்யுங் குணமுண்டாகும்

17. உம்மிடத்தில் எல்லாருக்கும் திருப்தியுண்டாகும்

18. சிறுகாரியங்களிலெல்லாம் குழப்பமடையும்படியான தன்மை யுண்டாகாது; காரியம் முடிவடைவதோடு கால ஓய்வு மதிகமாயேற்படும்.

19. ஒழுங்குள்ளவன் சிநேகிதர்களைப் பார்க்கிறுன்.

20. வேடிக்கை பார்க்க நேரம் ஒழியும்.

21. யாத்திரை செய்ய நேரம் ஒழியும். ஏனெனில் அவனுடைய ஒழுங்கு மிக உதவிபுரியும்.

22. ஒழுங்கால் வெற்றிக்கு நேராகவழியுண்டு.

23. மனத்திலுள்ள குழப்பமெல்லாம் நீங்கிவிடும்.

24. காரியங்களெல்லாம் எவ்வளவு சிக்கலா யிருந்தாலும் மனக்கலக்க மற்றிருக்கும்.

25. ஒழுங்கில்லாவிட்டால் குழப்பமுண்டாகும். குழப்பத்தால் மனத்திடுக்க முண்டாகும்; அதினுல் உலகமே வெறுப்பாகத் தோன்றும்.

(இன்னும்வரும்.)

டி. ஜி. கிருஷ்ணசாமி பிள்ளை.

நவத்வீப நகரகலாசாலை.

கி. பி. 1203 - ம் வருஷம் முதல் கி. பி. 1757 - ம் வருஷம் வரையில் மகம்மதிய அரசாட்சியின் சமயத்தில் வங்காளதேசத்

தில் நவத்வீப நகரமானது ஹிந்து சாஸ்திரங்கட்கு இருப்பிடமா யிருந்தது. கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டில் இங்கு சகல வேத சாஸ்திரகலாசாலையொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சர்வகலாசாலை ஸ்தாபன விஷயத்தில் மகம்மதிய அரசாங் கத்தார் எவ்வளவு உதவி புரிந்தனர் என்பது நமக்குத் தெரிய வில்லை. ஆனால் அவர்கள் வங்காளத்திலிருந்து பௌத்தர்களைத் துரத்திவிட்டு, அந்நியர்கள் ஹிந்து தேசத்தைப் படையெடுக்கா வண்ணம் காத்துவந்தார்கள் என்பதும் இதனாலேயே கண்டிப் பான ஹிந்து வைதீக முறையில் ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபிப் பதற்கு ஹிந்துக்களால் முடிந்ததென்பதும் மறுக்கமுடியாத விஷயங்களாம்.

நவத்வீப கலாசாலையின் ஆரம்பத்திற்குமுன் விகார தேசத் தில் விக்கிரமசீலபுரத்தில் பௌத்தகலாசாலை யொன்றும் மிதிலாபுரி யில் பிராஹ்மண கலாசாலை யொன்றுமாக பெயர் பெற்ற கலா சாலைகள் இரண்டு இருந்தன. கி. பி. 1203-ம் வருஷத்தில் பாக்டி யார்கில்ஜி என்னும் மகம்மதிய அரசன் விகார தேசத்திலிருந்து நவத்வீபத்திற்குச் சென்றபொழுது, விக்கிரமசீல புரத்திலுள்ள கலாசாலையை அவன் நெருப்புவைத்துக் கொளுத்தி அழித்து விட்டானென்று சொல்லப்படுகிறது; மிதிலாபுரிக் கலாசாலையோ, நவத்வீப நகரத்து வித்தியார்த்திகளின் பண்டிதத் திறமை யோங்க வோங்க, தானே அழிந்துவிட்டது. கி. பி. பதினன்காவது நூற் றாண்டில் ஹிந்து சாஸ்திரக் கல்விக்கு இருப்பிடமா யிருந்த மிதிலாபுரிக்கு இந்தியாவின் எல்லாப்பாகங்களிலிருந்தும் மாண வர்கள் ஏராளமாக வந்துகொண்டே யிருந்தார்கள்; அவ்விடத்தி லிருந்த கலாசாலை முக்கியமாகத் தர்க்க சாஸ்திரத்தில் பெயர் பெற்றிருந்தது. தர்க்கசாஸ்திர ஞானத்தில் வேறு எக்கலாசாலை யும் தங்களைப்போன்ற பிரக்கியாதிபடையலாகாதென்ற பொறாமை யினால் தூண்டப்பட்டு மிதிலாபுரிக் கலாசாலையார் ஆங்கிருந்த தர் க்கசாஸ்திரப் புத்தகங்களுள் எதையும் மாணவர்கள் வெளியே கொண்டுபோகும்படி விடுவதில்லை; மாணவர்கள் தங்களுடைய கைகளினால் எழுதியிருந்த குறிப்புப் புத்தகங்களைக்கூட வெளியே கொண்டுபோதல் கூடாது. மாணவர்கள் கலாசாலையை விட்டுச் செல்லும்பொழுது அங்கு தங்களுக்குக் கொடுக்கப்படும் யோக் கியதாபத்திரங்களை மாத்திரம் வெளியில் கொண்டுபோகலாம்

ஆகையால் மிதிலாபுரிக்கு வெளியே தர்க்கசாஸ்திரப் பயிற்சி பரவுவதற்கு இடமில்லாது போயிற்று. இந்த அசௌகர்யமானது கடைசியாக நவத்வீபத்து வாசுதேவ சார்வபௌமர் என்பவரால் நிவிர்த்திசெய்யப்பட்டது.

வாசுதேவ சார்வபௌமர் என்பவர் கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டின் மத்தியகாலத்தில் பிறந்தவர் இவருடைய பிதாவாகிய மஹேஸ்வரவிசாரதர் இவருக்கு சமஸ்கிருத இலக்கிய இலக்கணங்களிலும் ஸ்மிருதிதர்மங்களிலும் பேரறிவு உண்டாகும்படியாக நன்றாகக் கற்பித்துக் கொடுத்தார். இவர் 25 வயதாயிருக்கும்பொழுது நியாயசாஸ்திரம் படிக்கவேண்டுமென்ற அவாவுடன் மிதிலாபுரிக்குச்சென்று, அங்கு அப்பொழுது தர்க்கசாஸ்திரத்தில் மிகப்பிரக்கியாதி பெற்றுவிளங்கிய பட்சாதரமிசிரர் என்பவருடைய கலாசாலையில் சேர்ந்து கொண்டார். மிதிலாபுரியில் இவர் கற்கவேண்டியவற்றை யெல்லாம் கற்றபின்பு, சாலகபரீட்சையென்னும் ஓர்வித பரீட்சைக்குட் படுத்தப்பட்டார். சாலகபரீட்சையென்றால், ஒரு ஏட்டுச்சுவடியை ஒரு எழுத்தாணியினால் ஆழ்ந்து குத்தினால் அந்த எழுத்தாணியின் முனையானது எந்த ஏட்டில் கடைசியாகப் போய் நிற்கிறதோ, அந்த ஏட்டிலடங்கிய விஷயத்தை பரீட்சைக்கு வந்திருக்கும் மாணவன் விரித்துரைக்கவேண்டும். இவ்விதமாக நூறு ஏடுகளை வாசுதேவர் மிகத்தெளிவாயெடுத்துரைக்கவே குரு திருப்தியடைந்து இவருக்கு சார்வபௌமர் என்ற பட்டப்பெயரை அளித்தனர்.

மிதிலாபுரிப் பண்டிதர்கள் தர்க்கசாஸ்திரப் புத்தகங்களை வெளியிற்கொண்டுபோகச் சம்மதிக்காததைக்கண்டு, வாசுதேவர் "தத்துவசிந்தாமணி" யென்னும் நூலையும் "குஸுமாஞ்ஜலி" யென்னும் நூலின் செய்யுட் பாகத்தையும் மனப்பாடம் பண்ணிக்கொண்டு, காசிக்குச்சென்று அங்கு சிலகாலம் தங்கி வேதாந்த சாஸ்திரம் படித்துக்கொண்டு கி. பி. பத்தாவது நூற்றாண்டின் கடைசியில் தமது ஸ்வதேசம் திரும்பினர்.

இவர் தாம் மனப்பாடம் பண்ணியிருந்த இரண்டு நூல்களையும் எழுதிப் புத்தகங்களாக்கி வைத்துக்கொண்டு நவத்வீபத்தில் முதன் முதலாக ஒரு கலாசாலையை ஆரம்பித்தார்; எல்லா இடங்களிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் வரத்தொடங்கினர்கள்

இவருடைய மாணுக்கர்களில் நால்வர் பிரசித்தியடைந்தனர்:—(1) நியாயசாஸ்திர நிபுணரெனப் பெயர்பெற்ற ரகுநாதசிரோமணி (2) வங்காளத்தில் ஹிந்து ஸ்மிருதியின் ஸ்தாபிகராகிய ரகுநந்தனர். (3) வங்காளத்தில் தாந்திரீக சாஸ்திரத்தை முதன் முதலில் எடுத்துரைத்தவராகிய கிருஷ்ணுனந்த ஆகம வாகீசர் (4) வங்காளத்தில் வைஷ்ணவ மதஸ்தாபிதராகிய ஸ்ரீகிருஷ்ண சைதந்யர். வாசுதேவரும் தமது வயோதிக காலத்தில் தமது மாணுக்கர் ஸ்ரீகிருஷ்ண சைதந்யருடைய வைஷ்ணவமதத்தையே தழுவிக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இவர் தமது அந்தியநாட்களை ஒரிஸாதேசத்தில் கி. பி. 1520-ம் ஆண்டுசமயத்தில் அத்தேச அரசனுன கஜபதி பிரதாபருத்திரன் என்பவனுல் ஆதரிக்கப்பட்டு சுகமாகக் காலம் கழித்தார். சார்வபௌமநிருக்தி யென்னும் ஒரு நூலை இவர் இயற்றியுள்ளார்.

இவ்விதமாக மிதிலாபுரிக்கு வெளியே தர்க்கசாஸ்திரசாலை யொன்று ஏற்படவே, ஒன்றன்பின் ஒன்ருக வங்காளத்தில் பல இடங்களில் அநேக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் மிதிலாபுரிக் கலாசாலையினும் நவத்வீபக் கலாசாலையே சிறந்ததென்று இந்தியாமுழுதும ஒப்புக்கொள்ளுதற்கு நவத்வீபக் கலாசாலைப்பண்டிதர் ஒருவர் மிதிலாபுரிக் கலாசாலைப் பண்டிதரைத் தர்க்கம்செய்து வெல்லவேண்டியது அவசியமாயிற்று. ரகுநாத சிரோமணியே இந்த கௌரவத்தை யடைந்தார்.

(வரும்.)

சமாச்சாரக் குறிப்புகள்.

பல்கேரியாவும் பட்டுக்கொண்டது ஜெர்மனியவலையில். வெகுகாலத்திற்கு முன்னமேயே பல்கேரியா துருக்கியுடன் உடன்படிக்கை செய்துகொண்டு விட்டது என்று நாம் கேட்டவுடனேயே, சரி, சரி பல்கேரியாவும் ஜெர்மனியின் ஏமாற்றத்திற்குட்பட்டுவிட்டது என்று நாம் தீர்மானித்து விட்டோம். பல்கேரியா பொதுவாகத்தான் இருக்கிறது, தன்னைக் காத்துக்கொள்வதற்காகவே ஆயுதங்களையும் படைகளையும் சேகரித்துக்கொண்டிருக்கிறதென்று வந்துகொண்டிருந்த தந்திகளை நாம் நம்பவில்லை. க்ரீஸ் தேசம் பொதுவாகத்தான் இருப்பதாகத் தீர்மானித்து விட்டது. ரோமேனியா என்னசெய்யப் போகிறதென்று தெரியவில்லை. யுத்தம் கூடிய சீக்கிரம் ஓய்ந்து சமாதானம் ஏற்

படுமென்று நம்புவதற்கு இடமில்லை. ஆனால் மேற்கு யுத்தகளத்திலாவது கிழக்கு யுத்தகளத்திலாவது இப்பொழுது ஜெர்மனியர் ஜெயமடைந்து வருவதாகக் காணவில்லை. ப்ரெஞ்ச் பெல்ஜியப் போர்முனையில் நேசப்படைகளே ஜெர்மனியரைப் பின்தள்ள ஆரம்பித்திருக்கின்றன.

* * *

சீனதேசம் சில வருஷங்களுக்குமுன்பு தான் குடியரசு ஆயிற்று; இப்பொழுது மறுபடியும் அரசாங்கமாக மாறுவதற்கு வெகு வேகமாக ஏற்பாடுகள் நடந்துவருகின்றனவென்று தெரிகிறது. அரசாங்கமாறுதல்கள் திடீர் திடீரென்று சீனதேசத்தில் உண்டாவது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யமாயிருக்கின்றது.

* * *

இந்தியாதேசத்திற்கு ஆப்தராயிருந்து வெகுகாலமாக இங்கும் இங்கிலாந்திலும் விடாமுயற்சியுடன் உழைத்து வந்த ஹென்ரி காட்டன் என்னும் ஆங்கிலேயரும் இவ்வுலகம் நீங்கி மறுவுலகம் சென்றுவிட்டார். சென்றமாதத்தில் கேயர் ஹார்டியை இழந்தோம். இம்மாதத்தில் ஹென்றி காட்டனை இழந்தோம். இந்தியாவுக்கு இவருடைய மரணம் சகிக்கமுடியாதது.

* * *

நன்று, நன்று, வெகுநன்று! சுதேசமித்திரனுடைய பாரதபுத்திரன் 9-11-15 ல் வெளியாகிய 'சுதேசமித்திரனிலும் நீண்டதோர் வியாசம் எழுதியிருக்கிறார். ஸ்ரீமாந் சிதம்பரம் பிள்ளையவர்களின் மறுப்பை சுதேசமித்திரன் கம்பீர புத்தியுடன் அங்கீகரித்து ஒப்புக்கொண்டு தன்னைச் சீர்திருத்திக் கொள்ளும் என்று நினைத்தோம். ஸ்ரீமாந் சிதம்பரம்பிள்ளை யவர்களுடைய மறுப்பைப்பற்றியுள்ள 'பாரதபுத்திர" னுடைய கண்டனத்திற்கேற்ற மறுமொழி கொடுப்பதற்கு ஸ்ரீமாந். பிள்ளையவர்களே தகுந்தவராதலால், அவ்விஷயத்தைப்பற்றி நாம் ஒன்றும் பேசப் புகவில்லை. நம்மைப்பற்றியுள்ள குறிப்புக்களைப் பற்றி இங்கு எழுதுவதற்கு நமக்கு இப்பொழுது இடம்போதாதாதலால், அடுத்த பத்திரிகையில் கவனிப்போம். ஆனால் ஒன்றுமாத்திரம் இப்பொழுது கூற விரும்புகிறோம். பத்திராதிபர்களைத்தவிர மற்றெவருக்கும் "நாம்" என்றபதத்தை உபயோகித்துக் கொள்வதற்கு பாத்தியதையில்லையென்று நாம் கற்றமட்டில் அறிந்திருக்கிறோம். திருபர்கள் 'நாம்' என்ற பதத்தை உபயோகிப்பதை பாரதபுத்திரனிடத்தில்தான் கண்டோம். இவ்விஷயத்தைக் குறித்து 'பாரதபுத்திரன்' அவர்கள் சிறிது ஆராய்ச்சி செய்து தாம் திருபர் ஸ்தானத்தில் நிற்கும்பொழுது 'நான்' என்ற பதத்தையே உபயோகிக்குமாறு வேண்டுகின்றோம்.